***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***

***CC.No. 82/2015 – P.W.10/LW9***

| | |
|---|---|
| *Name* | தேவதாஸ் காவல் உதவி ஆய்வாளர்<br>வலங்கைமான் காவல் நிலையம் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *60* |

*1, 3 எதிரிகள் ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது*

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 10.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.

2. கடந்த 03.09.2014 ம் தேதியன்று வடுவூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்தபோது தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இருந்து வரபெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த எடஅன்னவாசல் கீழத்தெருவை சேர்ந்த நடராஜன் மகன் சக்கரவர்த்தி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து நிலைய குற்ற எண்.225/2014 ல் 294(பி), 324, 506(2) இதச ன் கீழ் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். (**அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் அன்றையதினம் 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாண்டியன் மற்றும் தங்கதுரை ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர்

மற்றும் வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகசர் மற்றும் வரைபடம் அ.சா.ஆ.13 மற்றும் 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

5. சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரிகளை தேடிய போது பெரமையன் மற்றும் ரங்கசாமி ஆகியோர்களை 03.09.2014ம் தேதியன்று 11.30 மணியளவில் எடக்கீழையூர் பஸ் நிறுத்தம் அருகில் நின்றுகொண்டிருந்தவர்களை குற்றக்காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன். நான் பணிமாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் பிரபு பார்வைக்கு வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சாட்சி பட்டியல் 1 முதல் 6 வரையானவர்கள் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். 161(3) வாக்குமூலத்தில் இடது கையில் காயம் இருந்ததாக யாரும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். சம்பவ இடத்தில் கிழக்கு மேற்கான இடத்தில் வீடுகள் உள்ளனாவா என்றால் வீடுகள் நிறைய உள்ளது.

சம்பவ இடத்தில் குப்புசாமி, பழனிவேல், சங்கர், சிறைசெல்வன், சிங்காரம் மற்றும் இதர வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தை உறுதிபடுத்தும் வகையில் மேற்கண்ட நபர்களை விசாரித்து 161 வாக்குமூலத்தை நான் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படுகிற நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தெரு விளக்குகள் இருநததாக வரைபடத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதா்ன.

என்னுடைய முதல் விசாரணையில் இருட்டு நடந்த சமயத்தில் எப்படி தாகக்கினார்கள் என்ற விபரத்தை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அன்றையதினம் அதே சமயத்தில் வழக்கில் கண்ட 3 எதிரிகளும் வாதி தரப்பினர் சக்கரவர்த்தி, ராணி, சுந்தரம்மாள், சதீஸ் ஆகியோர்கள் இரவு 07.45 மணிக்கு தாக்கி காயம் அடைந்து அனைவரும் இரவு 07.45 மணிக்கே மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். 226/2014 என்ற குற்ற வழக்கில் காயம்பட்டவர்கள் 07.45 மணிக்கே சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். இந்த இரண்டு வழக்குகளும் எதிர்எதிர் வழக்குகள் என்றால் சரிதான். என்னால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களும் என்னால் பதிவு செய்யப்பட்ட 161 வாக்குமூலுத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவத்தில் 161 வாக்குமூலத்தில் நாய் கடித்துவிடடதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சக்கரவர்த்தி தன்னுடைய 161 வாக்குமூலத்தில் இரும்பு பாறை கொண்டு தாக்கப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

வடிவேல் என்பவருக்கு சம்பவம் தெரியும் என்றும், புகார், 161 வாக்குமூலத்தில் தெரியும் என்று சொன்ன நிலையில் அவரை சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். 2 வது சாட்சி ராணி தன்னுடைய இடது கையில் அடித்து காயப்படுத்தியதாக குறிப்பிட்டு 161 வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வெவ்வேறு நேரத்தில் சக்கரவர்த்தி, சுந்தரம்மாள், ராணி, சதீஸ்குமார் விபத்து பதிவேட்டில் வெவ்வேறு நேரத்தில் சம்பவ நேரம் குறிப்பிட்ட நிலையில் அவர்களை விசாரித்து சம்பவ நேரம் குறித்து மறுவாக்குமூலம் எதுவும் பதிவு செய்தேனா என்றால் இல்லை. 161 வாக்குமூலத்தில் சுந்தரம்மாளை இரும்பு பாறை கொண்டு தாக்கியதாக எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 02.09.2014 ம் தேதியன்று காயம்பட்டவர்களை வாக்குமூலம் பெற்று அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கின் எதிர் வழக்கு தொடர்பாக நான் எதுவும் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எதிரிகள் மீது எதிர்வழக்கு போடவேண்டும் என்பதற்காக கால அவகாசமாக பின்னிட்டு அசா 1 சக்கரவரத்தியின் சகோதரர் சக்திவேல் குமாஸ்தா என்பவரின் ஆலோசனையின்படி எதிர் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.